**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 72/2020 |
| Name | : Aarumugam |
| P.W. | : 2 |
| Father Name | : Karuppusamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கணியூரில் வசித்து வருகிறேன். நான் கோவை ESI மருத்துவமனையில் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது அப்பா. 17.05.2019 ம் தேதி இரவு 07.00 மணிக்கு கணியூர் ஆஸ்பத்திரி மேட்டில் உள்ள எனது வீட்டில் இருந்தேன் அப்போது மகாபிரபு என்பவர் எனக்கு போன் செய்து எனது அப்பா கருப்புச்சாமிக்கு மடத்துக்குளம் – கணியூர் ரோட்டில் பார்த்திபன் என்பவர் வீட்டின் அருகே எனது அப்பா ஆடு மேய்த்துக் கொண்டு சாலையை கடக்கும் போது பல்சர் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் அங்கு சென்றேன் எனது அப்பாவிற்கு தலையில் அடிபட்டிருந்தது. ஆம்புலஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்று இரவு 12.40 மணிக்கு எனது அப்பா காலமாகிவிட்டார். எனது அம்மா விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மகாபிரபு தகவல் சொல்லி தான் சென்றேன். யாருடைய கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.08 16:53:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்